www.freetnbooks.com

**8 - STD** # முழு ஆண்டுத் தேர்வு - 2024

பதிவு எண்.

## தமிழ்

நேரம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 10 x 1 = 10

1. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் _______
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சி. ஈ) பெருஞ்சித்திரனார்
2. செவ்விந்தியர்கள் நிலத்தை _____ மதிக்கின்றனர்.
   அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
3. நீலகேசி கூறும் நோயின் வகைகள் _______
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
4. 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____
   அ) கலன்+லல்லால் ஆ) கலம்+அல்லால் இ) கலன்+அல்லால் ஈ) கலன்+னல்லால்
5. 'கண்ணா வா!' என்பது _____ த் தொடர்
   அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) வேற்றுமை
6. என்று + ஆய்ந்து - சேர்த்தெழுதக் கிடைப்பது _______
   அ) என்றாய்ந்து ஆ) என்றுஆய்ந்து இ) என்றாய்ந்து ஈ) என்ஆய்ந்து
7. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் ______
   அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை
8. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது _______
   அ) வானம் ஆ) கடல் இ) மழை ஈ) கதிரவன்
9. அடுத்தவர் வாழ்வை கண்டு _____ கொள்ளக்கூடாது.
   அ) உவகை ஆ) நிறை இ) அழுக்காறு ஈ) இன்பம்
10. வானில் முழு நிலவு அழகாகத் ______ அளித்தது
    அ) தயவு ஆ) தரிசனம் இ) துணிவு ஈ) தயக்கம்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 x 1 = 5

11. புற உலக ஆராய்ச்சிக்கு _____ கொழுகொம்பு போன்றது.
12. பொருளாதார படிப்பிற்காக அம்பேத்கர் _____ சென்றார்.
13. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் _____ என அழைக்கப்பட்டன.
14. 'செம்மரம்' என்பது ______ த் தொகை.
15. 'பண்' என்பதன் பொருள் _______

**III. பொருத்துக.** 3 x 1 = 3

16. வெண்பா - துள்ளல் ஓசை
17. ஆசிரியப்பா - செப்பலோசை
18. கலிப்பா - அகவலோசை

**IV. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி** 4 x 2 = 8

19. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
20. பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?
21. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
22. விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
23. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
24. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?

**V. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி** 4 x 2 = 8

25. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?



CamScanner

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

26. முற்றெச்சம் என்றால் என்ன?
27. இயல்பு புணர்ச்சியை விளக்குக.
28. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
29. வேற்றுமை அணி என்றால் என்ன?
30. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?

**VI. அடிபிறழாமல் எழுதுக.** **4 + 2 = 6**

31. அ) உடலின் உறுதி - எனத் தொடங்கும் வருமுன் காப்போம் பாடலை எழுதுக. **(அல்லது)**
அ) 'கற்றோர்க்கு' எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப் பாடலை எழுதுக.
32. 'தொடர்பு' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**VII. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி** **4 x 4 = 16**

33. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
34. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?
35. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.
36. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
37. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
38. சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை?

**VIII. விரிவான விடையளி** **2 x 6 = 12**

39. அ) கொங்குநாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக. **(அல்லது)**
ஆ) பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.
40. அ) உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
ஆ) மழைவளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?

**IX. விரிவான விடையளி** **3 x 8 = 24**

41. அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக. **(அல்லது)**
ஆ) குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றி தொகுத்து எழுதுக.
42. அ) கட்டுரை எழுதுக. : நான் விரும்பும் கவிஞர் **(அல்லது)**
ஆ) முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை
43. அ) இருப்பிடச்சான்று வேண்டி வட்டாச்சியருக்கு விண்ணப்பம் எழுதுக. **(அல்லது)**
ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

**X. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **8 x 1 = 8**

44. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.
அ) சோறு ______ (உண் / தின்) ஆ) சேவல் ______ (கூவும் / கொக்கரிக்கும்)
45. சரியான இணைச் சொற்களை இட்டு நிரப்புக.
அ) திருவிழாவில் யானை ______ வந்தது ஆ) ஆற்று வெள்ளம் ______ பாராமல் ஓடியது.
(மேடுபள்ளம் / வாழ்வுதாழ்வு / ஆடி அசைந்து / ஈடுஇணை)
46. கலைச்சொல் எழுதுக. அ) Doctorate ஆ) Punctuation
47. மரபுத்தொடரைத் தொடரில் அமைக்க : முதலைக்கண்ணீர்
48. பிழையைத் திருத்தி எழுதுக: பகைவர் நீவீர் அல்லீர்
49. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.
மழை நன்கு பெய்தது: எங்களால் விளையாட முடியவில்லை
50. சிறுமி ______ (தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்
51. போனான் - வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.



CamScanner

www.freetnbooks.com | FREETNBOOKS